தில் தெரிவித்துக்கொள்கிறேன். குறைந்தபட்சம் பெரியார் அவர்களது ஒரு ஸ்டாம்பாவது மத்திய அரசினால் பதிக்கப்படவேண்டுமென்று இந்த அரசு பரிந்துரை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெரியார் அவர்களுடைய தபால் தலை வெளியிடவேண்டுமென்று கேட்கவேண்டிய நேரத்தில் இந்த அரசு கேட்கும். அதை மத்திய அரசும் ஒப்புதல் அளித்து வெளியிடும் என்று கருதுகிறேன்.

திரு. என். கணபதி : பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தின் தேசிய சின்னங்கள் என்று பெரியார் அவர்களைப் போன்றவர்களை வர்ணித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேசிய சின்னங்களைக் கௌரவிப்பதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தேசிய சின்னங்களை இந்த அரசு என்றைக்கும் அகௌரவித்தது கிடையாது.

திரு. கா. காளிமுத்து : வ.உ.சி.-யின் நூற்றாண்டு விழா தினத்தை தேசிய விடுமுறை தினமாக ஆக்க உத்தேசித்திருப்பதுபோல் பெரியார் அவர்களது நூற்றாண்டு தின விழாவையும் விடுமுறை நாளாக, விடுமுறை தர அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிச்சயமாகச் செய்யும்.

திரு. மு. சுருளிவேல் : தந்தை பெரியார் அவர்களது பிறந்த தினத்தை சீர்திருத்த நாளாகக் கொண்டாடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் முதலிலேயே இதற்கான பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் நிலமற்றவர்களுக்கு நிலங்கள்.

* 57 வினா—**திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967 மார்ச் மாதத்திலிருந்து 15—12—69-ம் தேதி முடிய நீலகிரி மாவட்டத்தில் நிலமற்றவர்களுக்கு ஏதேனும் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், எவ்வளவு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) 15.78 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கு. அ. பொம்மன் : நீலகிரி மாவட்டத்தில் யாருக்கும் நிலம் கொடுக்கக் கூடாது என்று தடை உத்தரவு இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அந்தத் தடை உத்தரவை நீக்கி ஏழை ஹரிஜனமக்களுக்கு நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலங்கள் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற நிலத்தை அப்படி யாருக்கும் அடைமானம் செய்யக்கூடாது என்று ஒரு தடை உத்தரவு பொதுவாகப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் மாவட்ட ஆட்சிமன்றத்

தலைவர் இந்தத் தடை உத்தரவு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைஜாதியினருக்கு நிலம் அடைமானம் செய்து கொடுப்பதற்குத் தடையாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

Jaundice in Vellore Jail

* 58 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that some of the inmates of the Vellore Jail were affected with "Jaundice" during the period from 1st January 1971 to 30th April 1971;

(*b*) the number of fatalities, if any;

(*c*) whether the Government has taken any precautionary measures to check its (Jaundice) spread; and

(*d*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ), (ஈ) முதல் வரை: இக்கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : Is it not a fact that sometime ago in the month of May, the Hon. Minister for Revenue also gave a statement that he is not able to get some workers from the jail for certain work because they were all affected by jaundice ? Only in view of that I wanted to know whether there was any such position there, whether the Hon. Minister is fully posted with the fact that there was no sickness in that jail at least during the month of May ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உறுப்பினர் அவர்கள் தேதி குறிப்பிட்டுக் கேட்ட காரணத்தினால் இல்லை என்று சொன்னேன் அந்தத் தேதியில் 17—8—69 முதல் 1—10—69 வரையில் சுமார் பேர்களுக்கு இந்த வியாதி பரவி இருந்தது. அவர்கள் எல்லாம் குணமாகிவிட்டார்கள்.

Dr. H. V. HANDE : Is it not a fact that mostly in these jails because of the poor sanitary conditions, especially where cooking is done that this infection is spread and may I know whether the Hon. Minister has made any efforts to see that these things are properly kept, especially hygienically kept?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மஞ்சள் காமாலை நோய், ஜாண்டிஸ் வெளியே பரவும்போது ஜெயிலிலும் பரவி விடுகிறது. பரவியவுடன் முன் எச்சரிக்கையாக பல நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்.

Small Scale Industries.

* 59 *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state the total number of Small Scale Industrial Units registered in the State during the last year?